**செய்தி வெளியீடு எண்:190** **நாள்: 04.04.2017**

## செய்தி வெளியீடு

மத்திய தேர்வாணையம் (UPSC) குடிமைப் பணிகளுக்காக (Civil Services) நடத்தும் நேர்காணலை (Personality Test) தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் வகையில் முதன்மை தேர்வில் தகுதி பெற்ற தமிழ் நாட்டை சார்ந்த மாணவ/மாணவியர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையத்தில் மாதிரி ஆளுமைத் தேர்வும், சிறப்பு வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக வருகிற **ஏப்ரல் 7–**ஆம் தேதி **பேராசிரியர் கே.எம். பதி** மற்றும் **ஏப்ரல் 9**–ஆம் தேதி **திரு. டி. உதய சந்திரன், இ.ஆ.ப.** அவர்களால் ஆளுமைத் தேர்வு சம்பந்தமான சிறப்பு வகுப்புகள் நடைபெற உள்ளது. மற்றும் **ஏப்ரல் 8, (முற்பகல் மற்றும் பிற்பகல்) ஏப்ரல் 9 (பிற்பகல்) , ஏப்ரல் 10 (முற்பகல் மற்றும் பிற்பகல்)** ஆகிய தேதிகளில் இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் பணி, இந்திய வருவாய் பணி அலுவலர்களையும் கல்லூரிகளின் பேராசிரியர்களையும் கொண்டு குழு அமைக்கப்பட்டு மாதிரி ஆளுமைத் தேர்வும் நடைபெற உள்ளது.

ஆளுமைத் தேர்வுக்கு, புது டெல்லி செல்லும் மாணவ/மாணவியர்களுக்கு பயணப்படியாக ரூ.2000/–வழங்கப்படுகிறது. மேலும், பத்து நாட்கள் தமிழ் நாடு இல்லத்தில் தங்கி ஆளுமைத் தேர்வில் கலந்து கொள்ள ஏற்பாடுகளும் இப்பயிற்சி மையத்தால் செய்யப்பட்டு வருகிறது.

மாதிரி ஆளுமைத் தேர்வு பற்றிய மேலும் விவரங்களை இப்பயிற்சி மைய இணைய தளத்தில் www.civilservicecoaching.com-ல் பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி எண் 044–24621475.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**